

# அன்ப




சு.சுரேஸ்குமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியரின் இதயத்தில் இருந்து

நவீன யுகத்தில் புவியின் சுழற்சியிலும் கால ஓட்டத்தின் வேகத்திலும் நினைவுச்சுவடுகள் இருந்த இடமே தெரியாது அழிந்து செல்கின்றன எனினும் இந் இனிய நினைவுகள் மட்டும் காலத்தின் வேகத்துடன் புதிய பரிமாணத்துடன் எமது இதயங்களை நிரப்பிக் கொண்டே செல்கின்றன.

இவ்வணியுடன் இணைந்து பழகிய ஒவ்வொரு நிமிடங்களும் நினைக்கும் போது நெஞ்சை நெகிழச் செய்கின்றன.

எனது யாழ்ப்பாண வாழ்க்கை கோண்டாவில் மக்களுடன் நான் பழகி நல் அனுபவங்கள் நல்லூர் பிரதேசசபையின் மென்பந்து அணியில் இணைந்து செயற்பட்மையும் அவ்வணியினால் எனக்கு கிடைத்த கௌரவமும் அராலி மக்களும், கழகங்களும், ஊர்வாவற்துறை பிரதேச செயலகம், கழகங்கள், நல்லூர் பிரதேச செயலக கழகங்கள், ஏனைய திணைக்களக நண்பர்கள் நான் கண்ட செயலாள நண்பன், பிரியாவிடை வைபவம் ஆகியவற்றை நினைவில் நிறுத்தி நூல்வடிவில் தொகுத்து நண்பர்கள் என்மீது கொண்ட ஆழமான அன்பின் வெளிப்பாடாக இந்நூலை எழுத்துருவில் செதுக்கி உங்கள் இதயங்களுடன் சங்கமிக்கின்றேன்.

மேலும் எல்லா உறவுகளும் என்றும் எம்முடன் சேர்ந்து பிறப்பதில்லை இறைவன் ஏற்கனவே எமக்கு தெரியாத உறவுகளை முன்னமே படைத்து விடுகின்றார். என்பதை என்னுடைய அன்பு என்னும் இந்நூல் உணர்த்தி நிற்கின்றது என்று நம்பிக்கையுடன் உங்கள் இதயங்களில் ........

நல்லண்புடன்
**S. சுரேஸ்குமார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்

1. காலச்சுவடுகள்
2. அணி உருவாக்கம்
3. அணியிள் முது பெரும் தூண்கள்
4. அராலி விளையாட்டுக்கழகமும் மக்களும்
5. எனக்கு கிடைத்த கௌரவம்
6. ஊர்காவற்றுறை பிரதேசசெயலகம், கழகங்கள்
7. நல்லூர் பிரதேச சபை அணியின் நல்ல உள்ளங்களின் நினைவில்.
8. எனது பார்வையில் நல்லூர் பிரதேச சபையின் எதிர்கால முன்னேற்றம் பற்றிய தூர நோக்கு.
9. பிராந்திய உள்ளூராட்சி அணி பிரஸ்தாபம்
10. நல்லூர் கண்ட நண்பனாக பழகும் செயலாளர்
11. நல்லூர் பிரதேச சபை நண்பர்களால் எனக்கு அழிக்கப் பெற்ற கௌரவமும் பிரியாவிடையும்.

## காலச்சுடுவடுகள்

2002ஆம் ஆண்டு பொது சுகாதார பரிசோதகர் நியமனம் கிடைத்து யாழ்ப்பாணம் கோப்பாய் பகுதி பொது சுகாதார பணிமனைக்கு நியமிக்கப்பெற்று நல்லூர் பிரதேச சபையின் கோண்டாவில் பகுதி பொது சுகாதார பரிசோதகராக கடமையேற்றுக் கொண்டடேன்.

இதனால் அப்பகுதி மக்களுடன் பழகுவதற்கு சந்தர்ப்பம் ஏற்பட்டது. மேலும் அப்பகுதி மக்களின் சுகாதாரத்தை மேம்படுத்த வேண்டிய பொறுப்பு என்னை சார்ந்தே இருந்தது. இதன் பலனின் விளைவாக அப்பகுதி மக்களின் இதயங்களில் நீங்காத இடத்தைப் பெற்றுக் கொண்டேன்.

எனது கடமைகளான பொது சுகாதாரத்தை மேம்படுத்தல் அதாவது பாடசாலைகள், பொது மக்கள் கடைகள், உணவகங்கள், குடிநீர் போன்றவற்றில் தொற்று நோய்கள் பரவாது தடுப்பதற்கு எனது மக்களுடன் நான் பொறுப்புடனும் அன்புடனும் பழகியமையால் எனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமையை இலகுவாக்கிக் கொண்டடேன். அத்துடன் பல நண்பர்களை உருவாக்க காரணமாக எனது விளையாட்டுத்திறன் அமைந்தது.

ஆரம்பத்தில் என்னிடத்தில் எந்த பொழுது போக்கு இருக்கவில்லை வேலையும் அதன் பின் வீடுமாக இருந்தேன். சில நாட்கள் செல்ல பொழுது போக்கின்றி இருந்த நான் எனது வீட்டிற்கு அண்மையிலுள்ள நந்தாவில் மனோன்மணி அம்மன் ஆலய வீதியில் விளையாடிய இளைஞர்களுடன் துடுப்பாட்டத்தில் ஈடுபட்டேன். பின்னர் பொற்பதி விளையாட்டுக்கழகம், துர்க்கா விளையாட்டுக்கழகம் என்பன என்னை அழைத்து விளையாட சந்தர்ப்பம் வழங்கியமையால் நான் ஒரு விளையாட்டு வீரனாக கணிக்கப்பெற்றேன்.

நல்லூர் பிரதேச செயலகம் பிரதேச மட்ட கழகங்களிடையே நடத்தும் துடுப்பாட்டப் போட்டியில் நானும் பங்கு பற்றினேன் அங்கே எனது திறமைகள் நிதர்சனப்படுத்தப்பட்டன. இங்கு சிறந்த சாதனை வீரனாக கௌரவிக்கப்பட்டேன்.

இவ்வேளையில் நல்லூர் பிரதேச சபையில் 2003ம் ஆண்டில் உள்ளூராட்சி வார நிகழ்வில் முதல் முறையாக வலிகாம தென் மேற்கு பிரதேச சபை (மானிப்பாய்) தனது சிறப்பு நிகழ்வாக மென்பந்து துடுப்பாட்டப் போட்டியை அறிமுகப்படுத்தியது. இதில் யாழ்ப்பாணத்திலுள்ள மாநகரசபை, நகரசபைகள், பிரதேச சபைகள், உள்ளூராட்சி திணைக்களம் ஆகியவற்றின் அணிகள் பங்கு பற்றின இவ்வாறு ஒரு போட்டியை ஏற்படுத்திய மானிப்பாய் பிரதேச சபை அணியினரின் நல்முயற்சியால் மேற்படி சபைகளில் இலைமறை காயாக இருந்த விளையாட்டு வீரர்களும் வயது வேறுபாடின்றி பங்கு கொள்ள வைத்தது இதனால் அலுவலகமும் வீடும் என்று வாழ்ந்த உத்தியோகத்திரிடையே ஒரு மாற்றத்தை ஏற்படுத்த காரணமான வலிதென்மேற்கு பிரதேச சபையினரிற்கு நன்றியை முதலில் தெரிவித்துக் கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச் சுற்றுப்போட்டியில் நல்லூர் பிரதேச சபை அணியும் மோதிக் கொண்டது. இதில் பிராந்திய உள்ளூராட்சி அணியை எதிர்த்து நல்லூர் பிரதேச சபை அணி மோதி வெற்றி பெற்றுக் கொண்டது.

## அணி உருவாக்கம்

வலி தென்மேற்கு பிரதேச சபை செயலாளர் திரு. விக்டர் அப்போதய உள்ளூராட்சி உதவியாளர் திரு.அ.ரமேஸ் தற்போது வேலனை பிரதேச சபையில் கடமையாற்றும் மேற்படி இவர்கள் எமது அணியின் உருவாக்கத்திற்கு மிகப்பெரும் உந்து சக்தியாக அமைந்தனர். இத்தோடு பிராந்திய உள்ளூராட்சி திணைக்கள உதவி ஆணையாளர் அவர்களும் தனது பங்களிப்பை நல்கினார். இதனால் நல்லூர் பிரதேச சபையின் செயலாளர் திரு.பொ.வைரமுத்து அவர்களும் நிர்வாக உத்தியோகத்தராக கடமையாற்றி தற்போது ஊர்காவற்றுதை பிரதேச சபையின் செயலாளராக கடமையாற்றும் திரு.கணேசாணந்தராஜா அவர்களும் உற்சாகம் தந்து இவ்வணியை உருவாக்க காரணமாகினார். தொடர்ந்து திரு. கணேசானந்தராஜா பணிநிலை மாற்றம் பெற்று சென்ற பின் திரு.கு. அமிர்தலிங்கம் அவர்கள் தற்போதைய வல்வெட்டித்துறை நகரசபை செயலாளர் மேன்மேலும் விளையாட்டுத்துறையை விருத்தி செய்ய தன்னாலான முழு ஆதரவையும் நல்கினார்.

அணியின் முதுபெரும் தூண்கள்



திரு.கி.கொ.தேவராசா



திரு.ச.முத்துக்குமார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவரும் விளங்குவது எமது வளர்ச்சிக்கு பக்கபலமாக நிதி உதவிகளை நாம் கேட்டும் போது வழங்குவதும் அவர்களுடன் இணைந்து திரு.கு.தவசோதி உள்ளூராட்சி உதவியாளர் நல்லூர் பொறுப்பதிகாரி திரு.சி.தவராசா திரு.கிருஸ்ணகுமார். போன்றோர் உடன் நல்லூர் உப அலுவலக உத்தியோகத்தர்களும் தமது பங்களிப்பை நல்குவதும் அணி வளர்ச்சிக்கு உதவியது.

எமது அணி பல நிற உடைகளுடன் மைதானத்தில் நிற்பதை எமது அணியின் தலைவர் கவலைப்படுவதும் எமக்கு ஓர் சீருடை வேண்டும் என தயா அண்ணன் பிறேம் அண்ணா Dr. அண்ணாவுடன் ஆலோசித்த போது அந்த நேரத்தில் எமது அணியிற்கு பல வழிகளில் உதவி செய்த வள்ளல் கொலின்ஸ் தேவராசா அண்ணா தானாகவே முன் வந்து சீருடையை எமக்கு அன்பளிப்பு செய்தார். இதனால் சீருடை தந்த சீமான் கொலின்ஸ் அண்ணா என செல்லமாக அழைப்போம்.

அவரை நான் இச்சந்தர்ப்பத்தில் பாராட்டுகின்றேன். அணி தொடர்ந்து போட்டிகளில் ஈடுபட்டு தமது பயிற்சி மைதானமாக யாழ் முத்துத்தம்பி மைதானத்தை பயன்படுத்தி வந்தனர்.

யாழ் மாவட்ட மதுவரித்திணைக்களம் மாவட்ட மட்டத்தில் போட்டியை நடாத்தியது. அதில் முதல் முறையாக கொழும்புத்துறையில் நடைபெற்ற போட்டியில் நான் எனது ஆட்டத்திறமையை வெளிக்காட்டினேன். எனது அணியினர் இன்றும் அதை மறக்கவில்லை என்று தான் கூறவேண்டும்.

அதனை தொடர்ந்து அராலியில் களவத்துறை என்னும் இடத்தில் அதன் பெயருடன் விளங்கும் விளையாட்டுக்கழகம் வருடாவருடம் நடைபெறும் ஆடிப்பிறப்பு நிகழ்வை வெகு சிறப்பாக கொண்டாடும் ஒரே ஒரு கிராமம் என்று கூறலாம்.

இக்கழக மைதானம் குடாநாட்டிலுள்ள மைதானங்களில் மிகவும் பெரிய கழக மைதானம் அங்கு நடைபெற்ற பல கழகங்களுடனான போட்டியில் விளையாட வாய்ப்பு கிடைத்தால் எனது திறமையை வெளிக்காட்டி பந்துவீச்சு களத்தடுப்பு துடுப்பாட்டம் ஆகிவற்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்பாக செய்ததால் அக்கிராமத்தில் நல்லூர் சுரேஸ் என அழைக்கப் பெற்றேன். கிராம மக்கள் பலரும் என்னுடன் அன்பாக பழகியதை இன்றும் நான் நினைவு கூற வேண்டியவை.

அணியின் அதிரடி ஆட்டநாயகன் என எல்லோரும் அழைத்தமையால் எமது அணியினருக்கு மிகுந்த ஆர்வத்தையும் என் மீது மிகுந்த பற்றையும் ஏற்படுத்தியது.

அராலியில் பிரதேச விளையாட்டுக்கழகங்கள் இருக்க எமது அணியை களவத்துறை விளையாட்டுக்கழகத்தினர் வருடாவருடம் ஆடித்திங்கள் நிகழ்வின் போது தமது கழக வீரர்களை உற்சாகப்படுத்தவும் ஒன்றுமையை வளர்க்கவும் ஒரு போட்டியை ஒழுங்கு செய்து அவ்வணி வீரர்களுடன் சிநேகித பூர்வமாக விளையாட எமது அணியை அழைத்தது.

இவ்வளவு அணிகள் இருந்தும் எம்மை ஏன் அழைத்தீர்கள் என்று கேட்டதற்கு அவர்கள் எமது அணியின் நற்பண்பு பழக்கவழக்கங்கள், கட்டுப்பாடு, ஒழுக்கம் போன்வற்றைச் சுட்டிக் காட்டி நின்றனர். அத்துடன் எமது அணியின் பரஸ்பரம் புரிந்துணர்வு போன்ற நற்பண்புகள் அவர்களின் மனதில் ஆள ஊடுருவி எமது அணியுடன் நற்பண்பை மேலும் வலுச்சேர்த்தன. தொடர்ந்து இவர்களுடன் ஆண்டு தோறும் சிநேகித பூர்வ போட்டி நடைபெற்று வருகின்றது.

அத்துடன் அவ்வணியினரை ஊக்குவிக்கும் முகமாக எமது அணியினர் அவர்களை பாராட்டி பாராட்டு பத்திரம் ஒன்றையும் வழங்கியுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அராலி களவத்துறை விளையாட்டு கழகத்தின்
## 59 ஆவது ஆடி விழா
## 2006

# நல்லூர் பிரதேச சபை விளையாட்டு அவையின்
# வாழ்த்துச் செய்தி







அமைதியான கடற்கரையினிலே
அராலி தெற்கு – களவத்துறையில்
அழகான புற்தரையும் – ஆடுகளமும்
ஆடித் திங்கள் தேடி அழைப்பிதழ்
கூழக் குலவிட மகிழ்வோடு
அழைக்கும் எம் இனிய
உறவுகளே!





நட்புக்கும், புரிந்துணர்வுக்கும்
தமிழர்களின் பாரம்பரிய கலைகளுடன்
மென்பந்து ஆட்டத்தினையும்
சிரமங்களின் மத்தியில் சிறப்புடனே
நடாத்திவரும் களவத்துறை உறவுகளே!
எம்மை தேடி அழைக்கும் உங்கள்
அன்பு அழைப்புக்கு எமது மனமார்ந்த நன்றிகள்.
தங்கள் உறவுப் பாலம் மென்மேலும் வளர்ந்து
60 ஆவது வைரவிழாவை மிகப்பெரும் விழாவாக
அமைத்திட வேண்டுமென நல்லூர் முருகனை
வேண்டி வாழ்த்துகிறோம்.

*நன்றி*





நல்லூர் பிரதேச சபை,
விளையாட்டு அவை,
திருநெல்வேலி.

17-07-2006

இக்கழகம் எதிர்வரும் ஆடிப்பிறப்பு தினத்தன்று தனது 60வது நிறைவு விழா காணவுள்ளது. அராலிக் கிராம மக்களின் ஆடித்திங்கள் சிறப்பு நிகழ்வை பற்றி நான் அறிந்த விளையாட்டுக்கள் கிராமமக்களின் விருந்தோம்பல் பண்பையும் இவ்விடத்தில் புரிந்து கொண்டடேன். மக்களின் அன்னியோன்னியமான பழக்கம் கிராமத்து விளையாட்டுக்கள் இன்றும் அழியாது பேணிப் பாதுகாக்கும் முறை கிளித்தட்டு கயிறு இழுத்தல் உதைப்பந்தாட்டம் துடுப்பாட்டம் வலைப்பந்தாட்டம் இவற்றோடு சிறுவர் சிறுமியர்களுக்கான விளையாட்டுக்களையும் அறிய முடிந்தது. கழுவத்துறையில் துடுப்பாட்ட போட்டியில் நல்லூர் பிரதேச சபை அணி சீருடையணிந்து விளையாடும் வாய்ப்பு கிடைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது அணியின் மூத்த உறுப்பினர்கள் அணியின் வளர்ச்சிக்கு எப்போதும் தமது பங்களிப்பை கேட்காமலே வழங்கி வருகின்றனர். சீராகவும் கட்டுப்பாடு சிறந்த ஒழுக்கமும் கொண்ட அணியாக இருப்பது கண்டு ஒரு புறம் மகழ்ச்சியும் இன்னொரு புறம் பெருமிதம் கொள்கின்றேன்.

2004ம் ஆம் ஆண்டு உள்ளூராட்சி வார சிறப்பு நிகழ்வாக நல்லூர் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட கழகங்கள் நிறுவனங்கள் திணைக்களகங்களிடையே போட்டி ஒன்று ஏற்பர்டு செய்து நடாத்தி முடிக்கப்பட்டது.

அரச உத்தியோகத்தர்கள் வீடும் வேலைத்தளமும் என்று வாழ்வது தான் நடைமுறை இதனால் ஆரோக்கியமற்ற தொப்பை வயிற்றுடன் உலா வருவதை அனைவரும் காண்பது உண்மை எமது மக்களிற்கு உடற்பயிற்சி செய்ய நேரமின்மை வீடு வேலை என்றும் மிகுதி நேரம் நோயுடன் மருத்துவரை நாடுவதும் உண்மை இதனை விடுத்து சிறிது நேரம் உடற்பயிற்சியாக செய்வதால் நோயிலிருந்து விடுபட்டு உடல் ஆரோக்கியமாக இருக்கலாம். இதற்கு எமது மூத்த வீரர்கள் உதாரணபுருசர்களாக உள்ளனர்.

வயது போன பின் என்ன விளையாட்டு என்ற கூற்று காலம்கடந்த ஒரு பேச்சாக இருக்கின்றது. தற்போது மருத்துவ உலகம் நோய் நீக்கம் இன்னோர் மருந்தாக உடற்பயிற்சி, யோகா போன்வற்றை கருதி வருகின்றது. தொடர்ச்சியாக சிறிய விளையாட்டு பயிற்சி உள்ளத்திற்கும் உடலுக்கும் நல்ல உறுதியை ஏற்படுத்தி ஆரோக்கியமான வாழ்வை நோக்கி அடியெடுத்து செல்லும்.
ஊர்காவற்துறை பிரதேச செயலகத்தின் யாழ் மாவட்டரீதியாக அரச, அரசசார்பற்ற திணைக்களங்களிடையே மென்பந்து சுற்றுப்போட்டியை நடாத்தினர்.

நான் பல போட்டிகளில் சிறப்பாக விளையாடியமைால் நல்லூர் பிரதேச சபை அணியின் மூத்த தலைவர்களின் முயற்சியால் எனக்கு அதிரடி ஆட்ட வீரன் பல்துறை விருது வழங்கி கௌவிக்கப்பட்டேன். இதற்காக 25.05.2005 அன்று துடுப்பாட்ட மட்டை ஒன்றை எனக்கு வழங்கி கௌரவித்தமையும் மறக்க முடியாதது யாழ் மாவட்ட மக்களின் பாராட்டும் மனப்பான்மையை அதன் மூலம் அறிந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஊர்காவற்துறை பிரதேச செயலகத்தின் யாழ் மாவட்டரீதியாக அரச, அரசசார்பற்ற திணைக்களங்களிடையே மென்பந்து சுற்றுப்போட்டியை நடாத்தினர்.

இதில் நல்லூர் பிரதேசசபை அணி யாழ் பிரதேச செயலக அணியை எதிர்த்து விளையாடி வெற்றி பெற்றது தொடர்ந்து மது வரித்திணைக்களத்தை எதிர்த்து விளையாடி வெற்றி பெற்றது. இப்போட்டிகள் யாவற்றிற்கும் ஊர்காவற்துறை பிரதேச செயலர் திரு.ஸ்ரீமோகன் அவர்கள் ஒரு இளைய செயலதிபர் என்பதால் திறம்பட முன்னின்று நிகழ்த்தி வைத்தார். இந்த போட்டிகளில் பங்கு பற்றிய போது எனக்கு தீவகம் சென்று இயற்கை தன்மைகளை நன்கு அறியக்கூடிய ஒரு அரிய சந்தர்ப்பத்தை பெற முடிந்தது. மேலும் போட்டியை சிறப்பாக நிகழ்த்திய பிரதேச செயலருக்கும் அவர் சக உத்தியோகத்தவர்களுக்கும் நன்றியைத் தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன்.

இதற்காக நல்லூர் பிரதேச சபை அணியினர் ஊர்வாவற்துறை பிரதேச செயலகத்தினரை வாழ்த்தி அவர்களின் கன்னி முயற்சியை வரவேற்று வாழ்த்து மடல் ஒன்றினை வழங்கினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூர் பிரதேச சபை அணியின் நல்லவுள்ளங்கள்.

அணியில் என்னால் மறக்க முடியாதவர்களும் அவர்களை பற்றிய என் எண்ணத்தில் நினைப்பதை அன்பின் மேலீட்டால் தெரியப்படுத்த வேண்டியது என்னைப் பொறுத்தவரை வாழ்வில் மறக்க முடியாத விடயமாகவுள்ளது. சொல்ல நினைத்தவை எல்லாம் சொல்ல வார்த்தை தேடி எழுதியுள்ளேன். விடுபட்டவைக்கு மன்னிக்கவும்.

என்னை அடையாளம் கண்டு பிடித்து என் மென்பந்து விளையாட்டு பாடசாலை வாழ்வோடு முடிந்து விட்ட துடுப்பாட்டம் மீண்டும் நல்லூர் பிரதேசசபை மூலம் புத்துயிர் பெற்றது நான் வேறு திணைக்களகத்தை சேர்ந்தவன் என்ற வேறுபாடு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் யாருமே வேறுபடுத்தி பார்க்கவில்லை. அந்த வகையில் நல்லூர் பிரதேச சபை செயலாளருக்கு நன்றி கூறக்கடமைப்பட்டவன் அணி வீரர்களின் பட்டியலை சிபார்சு செய்து என்னையும் சபை வீரராக அங்கீகாரம் வழங்கியமை என்து திறமைக்கு கிடைத்த முதல் வெற்றி.

## அணியினர் பற்றி எனது மனத்திலுள்ளவை

அடுத்து கவிதை நடையில் முயன்று பார்க்கின்றேன் கவிதை போல் இருந்தால் ஏற்றுக்கொள்ளுங்கள்.



திரு.வெ.கனகநாயகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**என்னை அறிமுகமாகிய**

"நாயகமே" முதல் நன்றி உன்தனுக்கு அடையாளம் கண்டு என்னை அரவணைத்து ஆடுகளங்களுக்கு அழைத்துச் சென்று "ஆடடா ஆடு" என்று தோழில் தட்டிய தோழா உன்னை என்றுமே மறப்பதில்லை நான் என்றுமே உங்களுடன் இருந்துவிடக் கூடாதா என்று நினைப்பதுண்டு உந்தன் உற்சாகத்தாலும் உழைப்பாலும் நல்லூர் பிரதேச சபை அணி என்ற பெயரை பல இடங்களில் பலர் மத்தியில் உணர வைத்தவன போட்டிக்கு அழைத்துச் செல்வதில் நீ காட்டும் அக்கறையில் நீயே உனக்கு நிகர் வீடுகளிற்கு சென்று வீரர்களை விரைவாக அழைத்து வருவதும் செல்லிட தொலைபேசியில் அன்போடு ஒழுங்கு படுத்தும் பண்பும் குறித்த நேரத்தில் குறித்த இடத்துக்கு அணிவீரர்களை அழைத்து சென்று வெற்றி தோல்வி பாராது விளையாடவைக்கும் வெற்றிவேல் கனகநாயகம் அண்ணாவை நான் நண்பன் என்று அழைப்பதா? இல்லை என்றும் தோழமையோடு தோழா என்று அழைப்பதா இல்லை என் சொந்தச் சகோதரன் என்று அன்போடு அழைப்பதா என்று தெரியவில்லை என்னை தமது அணியில் இணைந்து விளையாடியதன் மூலம் மிகப் பெரியதொரு பெயரை எனக்குபெற்றுக் கொடுத்துள்ளார்கள் என்றே கூறலாம். அணியின் சீருடை போன்று அணி சீரோடும் சிறப்போடும் ஆட்டங்களில் பங்கு கொள்ளவும் புகைப்படங்களை நினைவில் நிலைக்கும் வண்ணம் புகைப்படங்களை உருப் பெருப்பித்து எல்லோரையும் பிரமிக்க வைத்து வாழ்த்துப்பா வழங்கும் கலாச்சாரம் உருப்பெற்று வாயார வாழ்த்தி நினைவில் நீங்காது இருக்க செய்து சிறந்த வீரனாக இருப்பவனுக்கு உரிய கௌரவம் வழங்கி உணர்ச்சி மேலீட்டால் அன்போடு பேச முடியாது கண்ணீா விட்ட அந்த கணம் என்னை மெய் சிலிர்க்க வைத்து உண்மையான அன்பு என்றால் என்ன என்பதை அன்றே உணர்ந்தேன் வாழ்த்துவதற்கு எனக்கு வார்த்தை போதாது ..



திரு.சு.பிறேம்குமார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்ப கால போட்டிகளில் அணியின் தலைவராக இருந்தவர் ஒவ்வொரு போட்டியிலும் உற்சாகம் தந்து பலம் முழுவதும் பிரயோகிக்கும் வீரர் பாகிஸ்தான் அணியின் தலைவர் "இன்சமாம்" போன்ற தோற்றத்தினையும் அவரின் பாணியில் விளையாடும் பங்கும் என்னை வெகுவாக கவர்ந்தது எனக்கு உற்சாகம் தந்து அன்போடு என்னை ஆரத்தழுவி ஊக்கம் தருவதில் அவருக்கு நிகர் அவரே நான் இவருடன் பல போட்டிகளில் பல பயிற்சி ஆட்டங்களில் பங்கு கொண்டிருக்கின்றேன். எல்லோரையும் உற்சாகப்படுத்திக் கொண்டே இருப்பார். இவரின் ஒவ்வொரு அசைவும் எங்களுக்கு இனிமையான அசைவாக இருக்கும் நான் ரசித்த படியே உற்சாகமாக விளையாடுவேன் நினைக்கும் போது பசுமையான இனிய நினைவுகள் "பிறேம் உல் குமார்".



திரு.சி.தயாபரன்

அணியின் ஸ்தாபகர்களில் ஒருவர் பண்பிற்கு தயாவாகவும் பாசத்தின் தமையனாகவும் அன்புக்கு நல்ல அண்ணாவாகவும் உறவிற்கு நற்சகோதரனாகவும் கவிதைக்கு நற்கலைஞனாகவும் செவிக்கு இனிய பாடகனாகவும் சிற்பிக்குள் இருக்கும் முத்து போல் தயா அண்ணா சபையின் எந்த நடவடிக்கையாயினும் முன்னின்று செய்யும் பண்பும் பொறுமை அமைதி அனைத்தும் ஒருங்கே அமைந்த நல்ல நண்பன் ஐந்து ஆண்டுகள் பழகியும் ஐந்து நாட்கள் போன்றுள்ளது 50 ஆண்டுகள் பழகினாலும் கிடைக்காத நட்பு எனலாம் ஆனால் விளையாட்டில் சிறுவன் வேடிக்கையில் நல்ல வித்தகன் இனிமையானவன் எளிமையானவன்.



திரு.ச.பிரசாத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடையில் எனக்கு அறிமுகமானவன் ஆரம்பத்தில் விளையாட்டு அவையின் பொருளாளர் என அறிந்தேன். நிதானமானவன் நேர்மையானவன் மனிதத்தை மதிக்கும் நற்பண்பாளன் நேரத்தை மதிப்பவர் கடமையை தனது உடமையானவன் கணியில் வ்லவன் சிறிது காலம் வெளிநாட்டில் வசித்தவன் வேடிக்கை விடுவதில் இவனுக்கு நிகர் இவனே விளையாட்டிலும் சமாதானம் செய்வதில் சிறந்தவன் சபையின் ஒரு தூண் விளையாட்டிற்கு அண்மையில் அறிமுகமானவன் பழகுவதற்கு மேலும் நாட்கள் போதாது.



திரு.கா.நடேசராஜன்

இலை மறை காயாக இருந்தவர் வெளிச்சத்தில் தெரிந்தவர்களில் இவரும் ஒருவர். Dr. நடேசராஜன் ஆரம்பத்தில் இவரை நான் நினைக்கவில்லை. ஏனென்றால் அமைதியான தோற்றம் கொண்டவர். அவரை அடையாளம் கண்டது ஊர்காவற்துறையில் துடுப்பாட்டத்திலும் பந்து வீச்சிலும் களத்தடுப்பிலும் என்னை பிரமிக்க வைத்தார். நானும் அவரும் ஆரம்பதுடுப்பாட்ட வீரர்களாக பின்னர் களமிறங்கியாடி வருவது வழமையாகி விட்டது. அவரிடம் காணும் நட்பு அனைவரையும் நேசிக்கும் பண்பு என்னைப் பெரிதும் கவர்ந்தது.



திரு.சி.கோகுலசுதன்

உருவத்தில் நேர்த்தி உள்ளத்தில் குழந்தை செயலில் சிறந்தவன் அமைதியானவன் ஆர்ப்பாட்டமில்லாதவன் சிரிப்பின் சித்திரம் நிறத்தில் திராவிடன் நேர்மையானவன் விளையாட்டில் வீரன் விசிக்கினால் ஆறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டால் நாலு பழக நல்லவன் பழகினால் நல்லூர் பிரதேசசபை அணியின் பரமன் கடமை கண்ணியம் கட்டுப்பாட்டின் காவலன் திருநெல்வேலியின் சொந்தக்காரன் விளக்கினால் சுத்த தங்கம் (24 கரட்)



திரு.ப.பத்மரூபன்

அச்சுவேலித்தம்பி வேகமாக மிதக்கும் வண்டி எறிந்தால் பயப்படும் பந்து சீராக வர சில காலம் செல்லும் ஆனாலும் அவர் தம்பி பயிற்சிக்குவா என்றால் வராமல் நிற்கும் தம்பி ஆடுவதில் நாயகன்.



திரு.சி.நிரஞ்சன்

அணியின் அமைதி வெடித்தால் வெஞ்சினம் குழந்தை உள்ளம் கோபம் தெரியாதவன் அமைதியானவன் ஆட்டம் அலுத்து விடும் எதிரணிக்கு இவன் விக்கற் சாய்க்க சச்சின் என்று அழைப்பதில் ஆனந்தத்திற்கு எல்லையில்லை.



திரு.வி.அசோக்

ஆடினால் அதிரடி விளையாட்டில் நல்லதம்பி வயதில் இளைதம்பி விளையாடுவது முத்துத்தம்பியில் அதிகம் பேசாதவன் அமைதியாக விக்கற் வீழ்த்தும் தம்பி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு.மு.சுதன்

சுந்தரமானவன் பட்டத்தில் மாஸ்ரர் படிப்பிலும் ஆசான் மொத்தத்தில் ஆசான் விளையாட்டில் நிதானி வீண்வம்பு போகான்.



திரு.ச.தபேஸ்வரன்

நாலு நாளில் நண்பன் நல்லவன் ஓடி உதவுவான் உள்ளத்தில் வஞ்சையில்லை எளிமையானவன் தங்கையில்லாதவன் அதனால் எல்லோரையும் மச்சான் என்பான் மூளாயில் இருந்து வருவான் 3 நிமிடத்தில் வந்து விடுவான் விளையாட்டுப்பிள்ளை போல் விளையாடுவான்.



திரு.இ.தயாளந்தன்

உயரமானவன் அசோகன் பரம்பரை போல் நடிப்பான் மிடுக்கான மீசையுடன் துடுக்காக கதை கூறுவான் சற்றே உரத்து பேசுவான் இணுவையான் இரக்கமானவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு.க.பாஸ்கரன்

நல்ல உயரம் கடமையில் கண் இசைச்சக்கரவத்தி எதிலும் விசுவாசம் விளையாட்டில் முடியாது என்று கூறமாட்டான் நாலும் தெரிந்தவன் நளினம் விடுவதிலும் சிறந்தவன்.



திரு.மு.ஐங்கரன்

பாதியில் வெளிநாடு சென்று விட்ட நண்பன் இடது கையாட்டக்காரன் அமைதியாக ஆறு அடிக்கும் ஐங்கரன்.

## எனது பார்வையில் நல்லூர் பிரதேச சபை எதிர் கால முன்னேற்றம் பற்றிய தூர நோக்கு.

நான் பொது சுகாதார பரிசோதகராக இருந்ததால் இப்பிரதேச சபை மேன்மேலும் பல வழிகளில் வளர்வதற்கு இப்பிரதேச மக்களின் ஒத்துழைப்பையும் வேண்டப்பட வேண்டியவை நிர்வாகத்தை சீராக செய்யக்கூடிய நிர்வாக ஆளணிவளம் தேவை சிறந்த திட்டமிடலுடன் கூடிய நகரமாக மாற்ற முடியும் இதற்கு நகர சபையாக மாற்ற முயற்சிக்க வேண்டும் கல்வி மான்கள் பிரதேசவாசிகள் ஆர்வலர்களின் ஒத்துழைப்பையும் நல்ல ஆலோசனைகளையும் சபை ஏற்க வேண்டும். நூலக வசதி மேம்படுத்த வேண்டும் யாழ்ப்பாண நூலகத்திற்கு அடுத்த படியாக வாயிலும் நூலகம் விருத்தி செய்ய வேண்டும் நவீன வசதிகளுடன் மருத்துவ சுகாதார சேவைகள் சிறந்த நிர்வாக முறைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உட்படுத்த வேண்டும். திண்ம திரவ கழிவுகள் அகற்றல், வீதிகள், கால்வாய்கள் பாலங்கள் மிகவும் சுத்தப்படுத்த வேண்டும் யாழ் பல்கலைக்கழகம் முழுமையாக இப்பிரதேசத்தில் இருப்பதால் பல்கலைக்கழகநகரம் என்பதால் மிகவும் நவீன வசதிகளுடன் விருத்தி செய்ய வேண்டியது அவசியம்.

இலங்கையில் மிகவும் பிரபல்லியமான திருநெல்வேலி சந்தை மலைநாட்டு உற்பத்திகளைக் கூட சந்தைப்படுத்தும் இடமாக திருநெல்வேலி இருந்தும் இது நகரமாக்கப்படாதுள்ளது. பொது சுகாதாரம் மேம்படுத்தப்பட வேண்டும் அதற்கு பிரதேச சபையினரின் ஒத்துழைப்பு மிகவும் அவசியம்.

எதிர்காலத்தில் இளைய தலைமுறையினரின் கையில் நல்லூர் பிரதேசசபை இயங்குமாயின் மிகவும் சிறந்து விளங்கும் எனலாம்.

மானிப்பாய் பிரதேச சபை செயலாளர் போன்று துடிப்பு மிக்க செயலகத்திறன் மிக்க ஒருவர் தலைமையின் கீழ் இயங்குமாயின் நல்லூர் வளம் பெற்று பல்கலைக்கழக நகரமாக மாற்றலாம் என்பதில் ஐயமில்லை.

## யாழ் பிராந்திய உள்ளூராட்சி அணி பிரஸ்தாபம்

யாழ் பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் அவர்கள் பிராந்திய மட்டத்தில் ஒரு அணியை உருவாக்க வேண்டும் என்ற முனைப்புடன் மானிப்பாய் பிரதேச சபை செயலாளர் திரு.M.J சாந்தசீலன் அவர்களால் முன்னெடுக்கப்பட்டு பிராந்திய ஆணையாளர் அவர்களும் ஒரு இளைய தலைமுறை என்பதால் இவ்வணியை உருவாக்கி முனைப்புடன் செயற்பட்டார். ஆரம்ப நிகழ்வுகள் பூர்த்தியாக்கப்பட்டு ஒன்று கூடி துடுப்பாட்ட பயிற்சியில் ஈடுபட முடியாத நிலையிலுள்ளது. மாவட்ட மட்டத்தில் விளையாட தீர்மானிக்கப்பட்டது. ஆயினும் நான் தற்காலிக இடமாற்றம் பெற்று வந்தால் அதன் வளர்ச்சி பற்றி என்னால் தெளிவாகக் கூறமுடியவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூர் பிரதேச சபை அணியின் எதிர்கால நோக்கம்

பிரதேசமட்ட கல்வி வளர்ச்சிக்கு உதவுதல். 5ம் தர புலமைப் பரிசில், O/L, A/L மாணவர்களுக்கு வழிகாட்டி பரீட்சைகள் ஏற்படுத்தல். சுகாதார மேம்பாட்டுக்குதவுதல், மருத்துவ முகாம் சபையின் ஊழியர் உத்தியோகர்தர்களின் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு உதவுதல் குறிப்பாக வறிய மாணவர்களின் கல்வி மேம்படுத்தல் கணணி, ஆங்கில, மொழி ஆற்றலை சபையினரிடையே ஏற்படுத்துதல். தற்சமயம் சபையின் வீரர்கள் தங்களின் சொந்த முயற்சியும் தமது பணத்தில் தமது அணியை இயக்கி வருகின்றார்கள் எதிர் காலத்தில் சபையின் ஆதரவு கிடைக்கும் பட்சத்தில் கல்வியாளர்களின் உதவியுடனும் பிரதேச ஆர்வலர்களின் உதவிகளுடனும் எதிர் கால நோக்கங்களை நிறைவேற்ற முடியும் என்பதில் எனக்கு மிகுந்த நம்பிக்கையுள்ளது.

## நான் கண்ட நண்பனாக பழகும் செயலாளர்



எனக்கு எவ்வித தொடர்புமில்லாது விளையாட்டினால் அறிமுகமான நண்பன் மானிப்பாய் பிரதேச சபையின் செயலாளர் திரு. யோ சாந்தசீலன் மிகவும் இளைய செயலாளர் ஆயினும் நிர்வாகத்திறன் உள்ள அலுவலகங்களில் பல வருடம் கடமையாற்றிய அனுபவம் நிர்வாக நடைமுறையில் நன்கு தேர்ச்சி பெற்ற சிறந்த நிர்வாகி.

அலுவலக நிர்வாக கல்வி கற்பிப்பதில் தேர்ச்சி பெற்ற கல்வியாளன் மனித நேய பண்புடன் பழகும் நல்ல மனிதன் பொது மக்கள் ஊழியர் உத்தியோகத்தருடன் நெருங்கி பழகும் செயலர் விளையாட்டு வீரனும் விளையாட்டின் மூலம் நாம் கற்றுக்கொண்ட விடயம் சகோதரத்துவத்தை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதித்தல் வெற்றி தோல்வி இரண்டையும் சமமாக மதித்தல் முயற்சியின் மூலம் தொடர் வெற்றியை பேணல் ஆகியவற்றை இவரிடம் நான் கண்ட நிதர்சனங்கள் சிறிய வயதில் இளைய செயலாளர் குடாநாட்டில் அனைத்து சபை உத்தியோகத்தர் ஊழியர் மதிக்கும் செயலாளர்.

என்னுடைய திறமைகளை பல தடவைகள் பாராட்டிய இனிய மனிதன் எனது பிரியாவிடை அறிந்து நேரில் சந்தித்து பிரியாவிடை கூறிய அன்பு உள்ளம் இவருக்கு எனது இதயம் கனிந்த நன்றிகள்.

## நல்லூர் பிரதேச சபை நண்பர்களால் எனக்கு அழிக்கப்பெற்ற கௌரவமும் பிரியாவிடையும்.

எனக்கு உறவுகள் இல்லாத குடாநாட்டில் உடன் பிறப்புக்களாக நல்லூர் பிரதேச சபை அணி இருப்பதை இவ்விடத்தில் என்னால் உணர முடிந்தது.

அன்பு நெஞ்சசங்களிடம் இருந்து பிரியாவிடை பெற்று செல்லும் நிகழ்வு என் நெஞ்சத்தை ஒரு கணம் சிலிர்க்க வைத்தது உடலில் ஓடிய குருதி ஒரு கணம் உறைந்தது போல் இருந்தது. 25.05.2007 சபையில் நடைபெற்ற பிரியாவிடை வைபவத்தில் எனக்கு ஏற்பட்ட உணர்வலைகளின் காரணமாக இம்மலரை நல்லூர் பிரதேசசபை அணியின் நல்ல உள்ளங்களின் நினைவை நெஞ்சத்தில் நிறுத்தி இதற்கு வடிவம் கொடுத்து இவ்வணி மேலும் பல வெற்றிகளை எதிர்காலத்தில் பெற்று பெயருடனும் புகழுடனும் விளங்க என் இதயம் கனிந்த வாழ்த்துக்கள்.

நாம் அனைவரும் எதிர்காலத்தில் அமைதியுடனும் நிம்மதியுடனும் சமாதானத்துடனும் ஒற்றுமையாக வாழ இறைவனை வேண்டுகின்றேன்.

நன்றிகள்.

S. சுரேஸ்குமார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org